முருகப்பெருமான் துணை

**மகான் தூர்வாசமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

25.09.2021, சனிக்கிழமை

1. சக்திமிகு மாதருமம் வழங்கி
சற்குருவாய் வாழும் அரங்கா
பக்தி கொண்டு உன்வழி மக்கள்
பணிந்து தொடர்ந்து வருக
2. வருகவே வையகம் மாறுமென
வழங்குவேன் துல்லிய ஆசி
கருதியே பிலவ தரிவை திங்கள்
காரிவாரம் நவதிகதி தன்னில்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 9ம் நாள், 25.09.2021, சனிக்கிழமை)
3. தன்னிலே தூர்வாசமுனிவர் யானும்
தரணியோர் சிறக்க உரைப்பேன்
அண்ணலாக அவதரித்த ஞானி
அரங்கன் பெருமை கண்ட மக்கள்
4. மக்களெல்லாம் ஞானத்தெளிவும்
மாச்சர்யம் வெல்லும் திடமும்
ஆக்கமும் அனைத்து நற்குணமும்
அடைந்து சிறப்பர் என்பேன்
5. என்கவே ஞானத்தலைவனின்
இணையிலா சக்தி கொண்டு
நன்மைசெய்ய வந்த நல்
ஞானியரின் திருவடிபற்றிய மக்கள்
6. மக்கள் கருமவினை வென்று
மறுமை போக்கும் வழியும்
தேக்கமின்றி குருவழி அடைந்து
திருவருளும் கிட்டி உயர நேரும்
7. நேருமை நீதிநெறி பிறழாத
நல்வாழ்வாம் ஞான வாழ்வும்
வருமுலகில் கண்டு சிறக்க நேரும்
வாழும் காலமே கடவுளை அறிய நேரும்
8. அறிவை மெய் அறிவாக்கி
ஆனந்த வாழ்வும் பெறநேரும்
வறுமை பசி பிணிக் கொடுமை
வளரா விரட்டும் சக்தியாக

9. சக்தியாக வந்த அரங்கன்
சங்கடம் போக்கி மீட்கும்
சக்திமிகு தரும ஞானக்குருவாகும்
சடாட்சரன் தேர்வு செய்த ஞானி ஆகும்

10. ஆகவே சுக்குக்கு மிஞ்சிய அவுசதமில்லை
அப்பன் சுப்பனுக்கு மிஞ்சிய கடவுளும் இல்லை
வகைபட அதுபோல் கலியுகத்தில்
வாழும் ஞானி அரங்கனுக்கு மிஞ்சிய குருவுமில்லை

11. குருவே அரங்க ஞானியை நோக்கி
குவலயத்தார் சரணாகதி பெருக்க
உருவாகும் உலகம் ஞானயுகமாற்றமாக
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—